### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (''நிறுவகம்'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு மற்றும் 108 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சுவாமி விபுலானந்த நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் (எஸ்வீஐஏஎஸ்) இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்பட்ட ரூபா 14,076,266 கிரயமான 11 சொத்து உருப்படிகள் முழுமையாக | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டு தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களை மீள்பெறுமதியிடுவதற்கும் கணக்குப் புத்தகங்களிற்கு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல். |

| | | |
|---|---|---|
| பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்பெறுமதியிட்டு கணக்குகளிற்கு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,500,000 தொகையான ஏனைய மானியம் பெறப்பட்டு மீண்டெழும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ஏனைய மானியத்தின் கீழ் காலக்கழிவிடப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான சான்றை கண்டறிந்து அதற்கிணங்க கணக்குப் புத்தகங்களில் சீராக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பான சான்றை கண்டறிந்து அதற்கிணங்க கணக்குப் புத்தகங்களில் சீராக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவி முடிவுறுத்தப்பட்ட, இறந்த மற்றும் ஓய்வுபெற்ற 06 ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 679,352 கூட்டுமொத்தமான பதவியணியினரிற்கு வழங்கப்பட்ட கடன்கள் அவர்களது பிணையாளர்கள் அல்லது அவர்களது சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 07 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளில் காணப்பட்டது. | அவர்களது யூபிஎவ் மீதியிலிருந்து அம்மீதிகளை அறவீடு செய்வதற்கு கடிதங்கள் அனுப்பப்படும். | நிலுவைக் கடன் மீதிகள் அறவீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக் கோவை | | | |
| XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதங்கள் | உயர் நிறுவனங்களின் ஒவ்வொரு மற்றும் அனைத்து ஊழியரும் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவுசெய்ய வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் விடுமுறையை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 125,374,799 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒவ்வொரு பிரிவிலும் வருகைப் பதிவேடுகள் பேணப்படுகின்றதுடன் கல்விசார் பதவியணியினரால் வருகைகள் மாத்திரம் குறிப்பிடப்படுகின்றன. | சுற்றறிக்கையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழகங்களின் பரீட்சைக் கையேடு மற்றும் நடைமுறைகள் | | | |
| XV அத்தியாயத்தின் 2, 4 மற்றும் 5 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் அனைத்துப் பிரிவுகளினதும் விடைத்தாள்களின் பரீட்சிப்பானது விடைத்தாள்களில் மதிபபெண்கள் இடப்பட்டிருந்ததை வெளிப்படுத்தியிருந்தன. முதலாவது மற்றும் இரண்டாவது பரீட்சிப்பாளர்களின் மதிப்பெண்கள் ஒரேமாதிரி இருந்ததுடன் மதிப்பெண்களில் வேறுபாடுகள் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் மதிப்பெண்ணிடும் முறைமையில் இரகசியத்தன்மை காணப்படவில்லை. | நிறுவனம் எற்கனவேயுள்ள மதிப்பெண் இடும் நடைமுறையை பின்பற்றுகின்றது. பரீட்சிப்பாளர்களிடையே இரகசியத்தன்மை பேணப்படுவது அவசியமில்லை. ஆனால் அவர்கள் தனித்தனியாக மதிப்பெண் இடவேண்டும். மதிப்பெண்ணிடும் முறைமையில் இரகசியத்தன்மை காணப்படவில்லை. | பல்கலைக்கழக பரீட்சை கையேடு மற்றும் நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வரைபு ஆண்டறிக்கையொன்று நிதிக்கூற்றுக்களை உள்ளடக்காமல் தாமதமாக வரிசை அமைச்சு மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 666,355,916 தொகையான நிலையான சொத்துக்களிற்கு நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் விரிவான பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 18/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அரச கூட்டுத்தாபனங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய அனைத்து உத்தியோகத்தர்களும் அவர்கள் வெளிநாடு செல்லும் நேரத்தில் கௌரவ அமைச்சரால் அவர்களது விடுமுறை அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க மூன்று உத்தியோகத்தர்கள் படிமுறைகளை எடுத்திருக்கவில்லை. | பதவியணி உறுப்பினர்களின் அனைத்து வெளிநாட்டு விடுமுறைகளும் அவர்கள் நாட்டை விட்டு செல்வதற்கு முன்னர் விடுமுறை வழங்கல் குழுவில் பரிந்துரைக்கப்பட்டு வரிசை அமைச்சிற்கு அதன் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படுகின்றன. ஆனால் வரிசை அமைச்சின் அங்கீகார கடிதங்கள் கொஞ்சம் தாமதமாக கிடைக்கின்றதுடன் அவ் அங்கீகாரங்கள் எஸ்வீஐஏஎஸ் இற்கு அனுப்பப்படுவதற்கு பதிலாக ஈயூஎஸ்எல், செங்கலடிக்கு அமைச்சால் அனுப்பப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 23,344,485 தொகையான பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,511,914 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 24,856,399 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கல்விசார் படிகள் ரூபா 17,850,798 ஆலும் பணிக்கொடை ரூபா 6,444,558 ஆலும் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது பிரதான வருமானம் மற்றும் செலவினங்களான மீண்டெழும் மானியம் மற்றும் ஆளணி வேதனங்கள் முறையே ரூபா 237,275,000 மற்றும் ரூபா 208,168,823 ஆக இனங்காணப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 22% மற்றும் 45% ஆல் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன முறையே 1.54 மற்றும் 1.43 ஆக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 0.55 ஆல் குறைவடைந்திருந்தன. இதன் விளைவாக செலுத்த வேண்டிய கணக்குகள் ரூபா 9,847,141 ஆல் அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறுவகம் ஆரம்பித்ததிலிருந்து 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் வெளிவாரி பட்டம் அல்லது டிப்ளோமா கற்கைநெறிகள் வருமானத்தின் சுயவருமானமீட்டல் மூலமாக நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எங்களது கல்வி கற்கைநெறி செயன்முறை சார்ந்ததாக இருப்பதாலும் நாங்கள் குறைந்தளவு உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டிருப்பதாலும் கட்டணம் வசூலிக்கும் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் மேலதிக சுவரோவிய கற்கைநெறிகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. | வெளிவாரி பட்டம் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மூலதன செலவினத்திற்காக ரூபா 15,000,000 மூலதன மானியம் பெறப்பட்டிருந்ததுடன் அதில் 39 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,872,155 தொகை செலவிடப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்கான | இக் கருத்துக்களிற்கு கடப்பாடுகள் உள்ளன. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக மூலதன மானியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நான்கு புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் specialization அறிமுகம், புதிய பிரிவுகள் மற்றும் அலகுகளின் ஸ்தாபிப்பு என்பன ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஆரம்ப படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன. நான்கு புதிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நாங்கள் அறிமுகப்படுத்தப் போகின்றோம். கற்பித்தல் மொழிகள் பிரிவின் கீழ் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு வரவிருக்கும் கல்விசார் குழுக் (syndicate) கூட்டத்தில் அதன் பரிந்துரைக்காக முன்வைக்கப்படும். | பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் specialization அறிமுகப்படுத்துவதற்கும் பிரிவுகள் அல்லது அலகுகளை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக மாணவர்களிற்கு நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் 03 மாதங்களினுள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2017/2018 கல்வியாண்டுகளிற்காக நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சைகளிற்கான பெறுபேறுகள் 04 மாதங்கள் தொடக்கம் 06 மாதங்கள் வரையான காலதாமதமொன்றுடன் வெளியிடப்பட்டிருந்தன. இந் நடைமுறை சித்தியெய்திய பின்னர் மாணவர்களின் தொழில் வாய்ப்புக்களை மோசமாக பாதித்திருந்தது. | வெளிப்புற பரீட்சகர்களால் அநேகமான தாள்களின் இரண்டாவது மதிப்பெண் இடுதல் பணி மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்பாராத சூழ்நிலை காரணமாக உரிய காலத்தில் இரண்டாவது மதிப்பெண் இடும் பணியிலிருந்து நாங்கள் புள்ளிகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் அது பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதத்திற்கு வழிவகுத்திருந்தது. மதிப்பெண் இடும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கும் உரிய காலத்தில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கும் முறையான பொறிமுறை அடையப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவி உள்ளடங்கலாக கல்விசார் பதவியணியினர்களின் பதவியில் 11 வெற்றிடங்களும் கல்விசாரா பதவியணியினரில் 36 வெற்றிடங்களும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 876 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் கீழ் வரிசை அமைச்சிடமிருந்து பெறப்பட்ட பெயர் பட்டியல்களின் பிரகாரம் அநேகமான கல்விசாரா பதவிகள் நிரப்பப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டில் அமைச்சிடமிருந்து பெயர் பட்டியலொன்று பெறப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்புக்களிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினரை அடிப்படையாகக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமாப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயன்முன்னேற்ற அறிக்கை காணப்படாததால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் நிறுவகத்தால் அடையப்பட்டிருந்ததா என்பதனை மதிப்பீடு செய்தல் சாத்தியமற்றருந்தது. ஆகையால் நிறுவகத்தின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை அடைந்துகொள்வதற்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை பயன்படுத்துதல் தொடர்பாக கணக்காய்வின் போது அளவிட்டுக் கூற முடியாதிருந்தது. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் குறிப்பிடத்தக்களவு தாமதம் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை மதிப்பீடு செய்து அளவீடு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் “2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்” என்பவற்றின் பிரகாரம் பல்கலைக்கழகம் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகளை அமுல்ப்படுத்துதல் தொடர்பாக அறிந்திருந்த போதிலும் சுற்றறிக்கையுடன் தொடர்புபட்ட அத் தொழிற்பாட்டை அமுல்ப்படுத்துவதற்கு நிறுவகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கிணங்க நிலைபேறான அபிவிருத்திக்காக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |